## தேசிய கல்வி நிறுவகம் - மகரகம

## பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2019

## (தமிழ் மொழி மூலம் - பகுதி நேரம்)

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**பாடநெறியின் காலம் :** பன்னிரண்டு மாதம் (இரண்டு தவணைகள் கொண்டது)

**பாடநெறியின் தன்மை:** மாதத்துக்கு இரு முறை வார இறுதி நாட்களை உள்ளடக்கிய 12 மாதங்களைக் கொண்டது

**பாடநெறி நடைபெறும் இடம்**

கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க.

**பாடநெறி நடைபெறும் மொழி மூலம்**

தமிழ் / சிங்களம்

**பாடநெறிக் கட்டணம்**

ரூபா 30,000/= (சமமான இரண்டு தவணைகளில் கட்டணத்தைச் செலுத்த முடியும்.)

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்.**

விண்ணப்ப முடிவு திகதியன்று சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

1. ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன்
2. இலங்கை கல்வி நிர்வாக சேவை / இலங்கை அதிபர் சேவை / இலங்கை கல்வியியலாளர் சேவை அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச அல்லது அரச உதவி பெறும் தனியார் கல்வி நிறுவனமொன்றின் தலைவராக இருத்தல்,
3. கற்பித்தலில் குறைந்த பட்சம் 4 வருடங்கள் அனுபவமும் அத்துடன் கடமைகளில் அனுபவமும் இருத்தல். குறைந்தது ஒரு வருட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை கடமைகளில் அனுபவமிருத்தல்.

(முகாமைத்துவ மற்றும் நிர்வாக கடமைகளுக்கான அனுபவத்திற்கான சேவையை அத்தாட்சிப்படுத்துவதற்காக வலயக் கல்விப் பணிப்பாளர்/திணைக்களத் தலைவர் மூலமாக அத்தாட்சிப்படுத்திய கடிதமொன்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.)

**பாடநெறிக்காக தெரிவு செய்தல்.**

கல்வி முகாமைத்துவம் தொடர்பான இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட வினாப்பத்திரத்தைக் கொண்ட நுழைவுப் பரீட்சையொன்றுக்கு தோற்றி அப்பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியானவர்கள் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய வழிமுறை**

தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் (www.nie.lk) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் என்ற பெயரில் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கணக்கு இலக்கம் 7041168 (நுழைவுப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1250/- ) வை வைப்பில் இட்டு அதன் பற்றுச் சீட்டினையும் இணைத்து

**மேலதிக பணிப்பாளர் நாயகம்,**
**கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம், மீபே, பாதுக்க.**

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பப்பத்திரத்தினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தங்கள் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் நுழைவுப் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

- விண்ணப்பப்பத்திரத்தினை அனுப்பி வைக்கும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“DSM- 2019”** எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- தங்களது விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி:- 21/ 12/ 2018.

கலாநிதி. (திருமதி) ரி. ஏ. ஆர். ஜே. குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.